2003 நவம்பர் 3]

13—

பேருந்து இயக்குதல்

•6930—திரு. கு. அண்ணாமலை:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், தென்காசி-சுரண்டை, கடப்போகத்தி, சடையப்பபுரம், மேலப்பாவூர் வழியாக இயக்கப்பட்ட தடம் எண் 22 நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் எப்பொழுது இப்பேருந்து இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தென்காசி தொகுதியில், கடப்போகத்தி, சடையப்பபுரம், மேலப்பாவூர் வழியாக தென்காசி-சுரண்டை வழித்தடத்தில் இயங்கிய தடம் எண் 22, செப்டம்பர் 2001-ல் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தொழில்நுட்ப காரணங்களால் ஓரிரு சுற்றுகளில் இழப்பு ஏற்பட்டது. பிறகு 20-9-2001 முதல் 29-4-2002 முடிய இப்பேருந்து முறையாக இயக்கப்பட்டது. பிறகு பயணிகள் அடர்வு மிகவும் குறைவாக இருந்த காரணத்தால், இப்பேருந்து இயக்கம் தற்போது நிறுத்தப்பட்டு விட்டது. மீண்டும் இத்தடப் பேருந்தினை இயக்கிடும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-35

திரு. கு. அண்ணாமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதியில் தென்காசி, சுரண்டை, கடப்போகத்தி, சடையப்பபுரம், மேலப்பாவூர் வழியாக இயங்கிய தடம் எண் 22 பேருந்து வெகுகாலமாக ஓடிக் கொண்டிருந்தது. தடம் எண் 22 பேருந்து தொடர்ந்து ஓடும்போது அதிக அளவில் வசூல் கிடைத்தது. எனவே மேற்குறித்த கிராம மக்கள் பயன்பெறும் வகையிலே அதிக வசூல் தரக்கூடிய தடம் எண் 22-ல் மாற்றுப் பேருந்தினை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல அந்தக் கோரிக்கை வழித்தடத்தில் 20-9-2001 முதல் 29-4-2002 முடிய ஏறத்தாழ 7 மாத காலத்திற்குத் தொடர்ந்து வேண்டிய அளவிற்கு அந்தப் பேருந்து வசதி செய்யப்பட்டது. ஆனால் அந்த வழித்தடத்தில் 7 மாத காலமாகத் தொடர்ந்து இயக்கினாலும்கூட போதிய அளவிற்கு வருவாய் இல்லாமல் மிகக் குறைந்த அளவிலேயே வருவாய் இருந்ததன் காரணமாக, அது தற்போது நிறுத்தப்பட்டது. மற்றொரு காரணம், கடப்போகத்தி கிராம மக்கள் ஒரு கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கும் திருநெல்வேலி-தென்காசி பிரதான சாலைக்கும், சடையப்பபுரம் பொதுமக்கள் ஒரு கிலோமீட்டர் தூரத்திலுள்ள மேலப்பாவூருக்கும் சென்று பேருந்து வசதியைப் பெற்று வருகிறார்கள். அந்தக் கிராமத்திற்குப் பக்கத்திலே ஒரு கிலோமீட்டர் தூரத்திலே போதுமான பேருந்து வசதி இருப்பதன் காரணமாக அந்த வழித்தடத்தில் புதிய பேருந்துகளை இயக்குகின்ற குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, திருமதி தமிழ்மொழி ராஜதத்தன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

14—

கிரானைட் தொழிற்சாலை

***23957—திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதியில் கிடைக்கும் கறுப்புக் கல்லை ஏற்றுமதி செய்யும்பொருட்டு கிரானைட் தொழிற்சாலை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேல்மலையனூர் தொகுதியில் கிடைக்கும் கறுப்புக் கல்லை ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS